# இந்தியச் சிந்தனை வரலாற்றில் வள்ளுவம்

ந. பிச்சமுத்து

சிந்தனை என்பது மக்கள் தங்களைப் பற்றியும் தங்களைச் சூழ்ந்துள்ள புற உலகத்தைப் பற்றியும் புரிந்துகொள்ள முயன்ற மூளையினுடைய செயற்பாட்டின் விளைவான கருத்து வடிவம் எனலாம். அனுபவத்தில் அவ்வப்பொழுது தோன்றும் உணர்வுகளை எண்ணங்கள் என்றால் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிய பல்வேறு கோண உணர்வுகளின் தொகுப்பைச் சிந்தனை, கொள்கை, அல்லது தத்துவம் எனலாம். பொதுவாகச் சிந்தனை என்பது மக்களின் நாகரிக வளர்ச்சிக் கேற்ப அமைவது, ஈண்டு வள்ளுவத்தை அதாவது வள்ளுவரின் சிந்தனையை அறிவதற்கு இந்தியச் சிந்தனையாளர்களின் நாகரிக வரலாறு பற்றி அறிவது இன்றியமையாததாகிறது.

இந்திய நாகரிகத்தின் அடிப்படைக் கூறுகளை அறிய மேற்கொள்ளும் முயற்சியில் வட மொழியிலும் அதன் வரலாற்றிலும் திராவிடர்களை இழித்தும் பழித்தும் பேசும் செய்திகள் அடங்கிக்கிடங்கும் மிகவும் கேடுகெட்ட பகுதிகளிலும் சிக்கல்கள் நிறைந்திருக்கும் இடங்களிலிருந்தும் தொடங்க வேண்டும். இந்தியாவில் விந்திய மலைகளுக்குத் தெற்கேயுள்ள தீபகர்பத்தில்தான் உண்மையான இந்தியா இருந்து வருகிறது. அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் ஆரியர்களின் வருகைக்கு முந்திய தங்களின் நாகரிகக் கூறுகளையும் மொழியையும், சமூக நிறுவனங்களையும் தெள்ளத் தெளிவாகத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள. அங்கேயும் வராலற்றாசிரியர்கள் உள்நாட்டு நாகரிகத்தை பகுத்துணர்வதற்குக் கடினமாக இருக்குமளவுக்கு ஆரியக் கலாச்சாரம் நெடுந்தூரம் ஊடுருவிக் கிடக்கிறது. இந்திய வரலாற்றை அறிவியல் அடிப்படையில் ஆராய விரும்பும் வராலற்றறிஞர்கள் கங்கையாற்றுப் படுகையிலிருந்து தொடங்குவதைக் காட்டிலும் கிருஷ்ணா, காவிரி, வைகை ஆறுகளின் படுகையிலிருந்து தொடங்கவேண்டும் என்கிறார் ஏ.வின்சன்ட் ஸ்மித் அவர்கள் அவர் கூற்றுக்கு ஏற்பவே பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள். ‘பழங்காலத் தமிழ்ப் பாக்கள்’ (“The poems of Ancient Tamil”) என்னும் தம் ஆய்வு நூலில் பல அரிய கருத்துக்களைக் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்கள். என்றாலும் இந்திய வரலாறு எழுதுகிறவர்கள் பலர் வேத காலத்துக்கு முந்திய வரலாறு (Pre- Vedic Period) என்றே தொடங்குகின்றனர். அதுவும் நம் ஆய்வுக்குப் பெரிதும் பயன் படுவதாக உள்ளது. சிந்து வெளி நாகரிகத்தை ஆய்வு செய்த அறிஞர் பலர் அது ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய தனி நாகரிகம் என்பதை ஏற்றுக் கொள்கின்றன.[2] அந்த நாகரிகத்தை உருவாக்கியவர்கள் யார் என்பது ஒரு வினா. பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் சிந்து வெளி நாகரிகம் திராவிடரால் உருவாக்கப்பட்டதே என்று நிறுவி உள்ளனர். என்றாலும் 1875-இல் ஆரிய சமாஜத்தை நிறுவிய தயானந்த சரசுவதி, இந்திய தேசிய காங்கிரசு அமைப்பின் தொடக்க காலத் தலைவர்களுள் ஒருவரான இக்கொள்கைகளின் வலிவு மெலிவுகளைச் சிறிது காண்போம்.

**ஆரியர்கள் யார்?** ஆரியர்கள் அல்லது இந்தோ ஆரியர்கள் பாக்டீரியாவிலும் வடஇந்தியச் சமவெளிகளிலும் தங்கி இருந்து, ஏறக்குறைய கி.மு.1500 வாக்கில் இந்துகுஷ் மலைக் கணவாய்களின் வழியாக இந்தியாவில் நுழைந்தார்கள். அவர்கள் மேய்ப்பாளர்களாக இருந்ததால் பஞ்சாப் சமவெளியில் புல்வெளியைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள் என்பர் வரலாற்றறிஞர் ரொமிலா தாப்பார்[3]

---

1. A. Vincent Smith, Indian History, Introduction P.8

2. Fr. Heras works reveal (1) that the Dravidians predominated the whole of India during the third. fourth and fifth Millennium B.C. (2) that they had established their high civilization throughout India. (3) that a language akin to sangam Tamil (whether we call it Proto-Dravidian was spoken throughout India. S. Rathinasamy, The Ancient Tamils and Their Literature, P.24

3. The Aryans or Indo Aryans-decendants of Indo Europeans-had remaind for some time in Bactria and the northern lranian Plateau but by about 1500 B.C. they migrated into northern India through the Pases inthe Hindukush mountains. At first they wandered across the playing of the Punjab, searching for pastures as the were mainly cattle breading people. Romila thapar A History of India Vol.I PP(29-30) Penguin books limited.

ஏறக்குறைய கி.. 2000 ஆண்டு அளவில் போலந்திலிருந்து மத்திய ஆசியாவரை நீண்டு கிடந்த ஸ்டெப்பிப்புல்வெளியில், உயரமாகவும் வெளிர்நிறமாகவும் நீண்ட தலையையும் உடையவர்கள பகுதி நேர நாடோடிகளான காட்டுமிரண்டிகளாக வாழ்ந்தவர்கள் ஆரியர்கள்[4] பாஷம்.

சிந்துவெளி அகழ்வாய்வு இயக்குநர் சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களுடையதல்லை என்பதை வேறு சொற்களில் சொல்கிறார், அதாவது அந்த நாகரிகம் திராவிடர்களுடையது, அல்லது மண்ணின் மைந்தர்களுடையதாக இருக்க வேண்டும் என்கிறார்.

"வில்டுரண்ட் கூறுவது போல் மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவில் நுழைந்த கொள்கைக்காரர்களான ஆரியர்கள்"[6] அக்காலத்தில் உலகதிலேயே மிக உயர்ந்த ஈடு இணையற்ற நகர நாகரிகத்தை அழித்துச் சிதைத்தனர், சிந்து சமவெளியைக் குடிசைகளாலான குக்கிராமங்களாகவும் மேய்ச்சல் நிலங்களாகவும் மாற்றிவிட்டனர்.[7]

கி.மு. 1500 வாக்கில் சிந்து சமவெளியில் நுழைந்த ஆரியர்கள் கங்கையாற்றின் வடகரை வழியாக இமயமலைச் சாரலில், ஏறக்குறைய 600 ஆண்டுகள் அலைந்து திரிந்து, அத்தினாபுரம் வழியாக, கி.மு. 9ஆம் நூற்றாண்டளவில் அட்ராஞ்சிகோ வந்தார்கள்.[8] ஆநிரைகளை மேய்த்து வளர்ப்பதையே தலையாய தொழிலாகக் கொண்டு மேய்ச்சல் தொழிலோடு சிறிது வேளாண்மையும் செய்த ஆரியர்கள் அரை நாடேடிகளாக இந்தியாவில் நுழைந்தார்கள். ஆரியர்கள் மாட்டுக் கொட்டிலில் மாடுகளோடு வாழ்ந்தார்கள் என்னும் உண்மையிலிருந்தே அவர்களின் சமூக அமைப்பில் ஆநிரையைப் பெருக்குவது எந்த அளவு பெருமைக்குரிய செயலாக இருந்தது என்பது விளங்கும். மாடுகளோடு மாடுகளாய், குழுவாக வாழ்ந்து, குழுவாக உடலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்று இனத்தைப் பெருக்கிக் கொண்டனர். எனவே அவர்கள் ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.[9] அக்காலத்தில் அவர்களுக்கிடையில் திருமணம், குடும்பம் என்ற எண்ணமே எழவில்லை.

அக்கால ஆரியர்கள் மண்ணுலக வாழ்க்கை இன்பங்களிலும், குடித்துக் களிப்பதிலும் திளைத்துக் கிடந்தார்களேயன்றி, இறப்புக்குப் பின்னர் வாழ்க்கை உண்டா, இல்லையா என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை, உயிர் வாழ்க்கைக்கு வன்முறையே உகந்ததென வலியுறுத்துவதே அவர்களுடைய உலகப்பார்வையாக இருந்தது. வாழக்கைக்கு ஒரு குறிக்கோள் தேவையா என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் இந்த உலக வாழக்கையாகிய சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுபட்டு உயரவேண்டும் என்பதைக் குறக்கோளாகக் கொண்டதில்லை. ரிக் வேதப் பாக்களில் வாழ்க்கையிலிருந்து விடுபடுவது, வாழ்க்கைகைத் துறத்தல் மனிதன் அடைய வேண்டிய இடம் பிறப்பு, மறுபிறப்பு முடிவில்லாத ஒன்று என்பவற்றைப் பற்றிய குறிப்பு ஏதுமில்லை.[10]

---

4."About 2000 B.C. the great Steppeland which was stretched from Poland to Central Aisa was inhabited by semi-nomadic barbarians who were tall, Comparatively fair and mostly long headed" A.L. Basham The Wonder That was India P.29

5. Sir John Marshal, Cited by S.Ranaswami, Indian Palaeogrphy, P.20

6. Will Durant, The Story of Civilization, P.

7. இராகுல சாங்கிருத்தியாயன், ரிக்வேத கால ஆரியர்கள், ப.18

8. It has been suggested that the line of Aryan Thrust eastward way along the Hmalayan forthills, north of the ganga (D.N.Jha, Ancient India, In Historical Outline, P.19 People's publishing House, New Delhi – 1977) They lived a settled life in their wattle and dauf houses, domasitcated animals and practiced agriculture on a greater scale than they had done earlier D.N. Jha, ibid P.20 – 1977.

9. The Aryans came to India as Seminomadic people with mixed potoral and agricultural economy, in which cattle rearing played a prominent role. Cattle formed their most valued possessions and the chief form of their wealth. The influence of cattle raising on the social polity of the Aryans can be seen from the fact that those who lived with their cows in the same cow-shed came to belong to the same gothra. D.N. Jha, ibid P.14

10. K. Damodaran, Man And Society, In Indian Philosophy, P.3, Peaples Publishing House, 1970.

தத்துவப் பேராசிரியர் தாமோதரன் அவர்களின் கூற்றிலிருந்து இந்தியாவில் தோன்றிய சார்வாகம், ஆசீர்வகம், சமணம், பவுத்தம் போன்ற தத்துவங்களின் வேர் ஆரியச் சித்னையோடு தொடர்பில்லாதவை என்று தெரிகிறது. அதாவது அட்ராஞ்சிகேரா வந்த ஆரியர்கள் நல்லதோ, கெட்டதோ வாழக்கையைப் பற்றிய எந்தவிதமான சிந்தனையுமில்லாத காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள் என்று தெரிகிறது.

மேற்காட்டப் பெற்ற அறிஞர்களின் முடிவின்படி நமக்கு விளங்கும் உண்மைகள். 1. இந்திய நாகரிகம் மிகத் தொன்மையானது. 2. காட்டுமிராண்டிகளாக ஆரியர்கள் இந்த நாட்டில் நுழைவதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இந்த மண்ணில் தோன்றிய திராவிடர்களும், அவர்களின் இனக் குழுவினர்களான, கிராதர்கள் என்று அழைக்கப்பட்ட நாகர்களம், மங்கோலியர்களின் கலப்பினைப் பெற்ற வங்காளியர்களும், மற்றும் சிலரும் தான் இந்திய நாகரிகத்தின் சிறப்புக்குரிய இனத்தவர்கள் என்பது விளங்குகிறது. இதிலிருந்து நாகரிகத்தின் விளைவான சிந்தனையும் திராவிடர்களுக்கும் அந்த இனக் குழுவினருக்கும் உரியது என்பது விளங்குகிறது.

இந்தப் பின்னணியில் வள்ளுவரின் சிந்தனைகளைப் பற்றிச் சிறிது காண்போம். வள்ளுவர் கி.மு.முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது சிலர், திருக்குறள் ஆய்வில் ஈடு இணையில்லாத அறிஞர் முனைவர் டி. முருகரத்தினம் அவர்கள் கி.பி. முதல் நூற்றாண்டு என்பர். காலம் எதுவாயினும் அவர் வாழந்த தமிழ்ச் சமுதாயத்தில் பார்ப்பனியம் அரச மரியாதை பெற்றிருந்தது. வருணாச்சிரமம் வேர்கொண்டு விட்டது, தொன்று தொட்டு இருந்து வந்த தொழிற்பாகுபாடு (Professional divisions) சாதிகளாக்கப்பட்டு விட்டன. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவும் அதன் உற்பத்திக்குத் துணையான கருவிகளையும் உற்பத்தி செய்தவர்கள் தாழ்ந்த சாதிக்காரர்கள், தீண்டத்தகாதவர்கள், சூத்திரர்கள் என்று ஒதுக்கப்பட்டனர். அவர்கள் கல்வி பெறுவது தடுக்கப்பட்டது. ‘ஓதலும் தூதும் உயர்ந்தோர்மேன’ என்ற விதி தொல்காப்பியத்தில் நுழைக்கப்பட்டது[11].

தெய்வம்பற்றிய சிந்தனையில் திராவிடர்கள் தாய்த் தெய்வம், லிங்கம், முருகன் போன்ற பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். மாய மந்திரங்களை நம்பினார்கள். மந்திரம் மாயை என்பவை மனிதன் தன் விருப்பம் போல் இயங்குமாறு இயற்கைச் சக்திகளுக்குக் கட்டளையிட்டுப் பணியச் செய்வது. ஒருவகையில், தனக்கு மேலாக ஒரு சக்தியிருப்பதாக நினைப்பது மூடநம்பிக்கைதான் என்றாலும் அந்தச் சக்தியை ஏவல் கொள்ள முடியும் என்னும் சிந்தனை தெய்வீகச் சக்திகளைவிடத் தான் உயர்ந்தவன் என்னும் ஒருவகையான நாத்திகவாதம் எனலாம். திராவிடர்கள் மந்திரம், மாயையில் வல்லவர்கள். செத்தவர்களைப் பிழைக்கவைத்து விடுவார்கள் என்று ஆரியர்கள் அஞ்சினார்கள். “தமது வடக்கு விரோதிகளின் மாயாஜாலம் என்றாலும், மந்திர, தந்திரம் என்றாலும் கூட ஆரியர்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர்… அவர்களின் தந்திரோபாயங்கள் மிக சாமார்த்தியமானவையாக இருந்தன. அவர்கள் ஆரியர்களைத் திக்கு முக்காடச் செய்தனர்” என்று இருக்கு வேதம் (7-18-21) கூறுவதாகச் சொல்கிறார் இராகுல் சாங்கிருத்தியாயன் [12]இந்த நாத்திக வாதத்தைப் போலவே கி.மு. 6ஆம் நூற்றாண்டில் பிரகஸ்பதி என்ற கருப்பரினச் சிந்தனையாளர் அணுவியலை அடிப்படையாகக் கொண்ட உலகாயதமும் (Materialisam) லோகாயுதம் சங்க கால மக்கள் அறிந்த ஒன்றே. “உடம்பார் அழியின் உயிரார் அழிவர்” என்னும் திருமந்திரம் (704) திடீரென்று தோன்றிய சிந்தனையன்று பழங்காலச் சார்வாகத்தின் சொச்ச மிச்சம் எனலாம். கடவுள் இல்லை,நரகம்,சொர்க்கம் என்று எதுவும் இல்லை, மனிதன் இறந்தால் உடம்பிலுள்ள காற்று, நீர், சூடு ஆகியவை அந்தந்த மூலப் பொருட்களோடு சேர்ந்து விடுகின்றன. உடம்பு வேறு, உயிர்வேறு, இல்லை என்பது உலகாயுதம்.

கி.மு.9ஆம் நூற்றாண்டு அளவில் இந்திரப் பிரஸ்தம், அட்ராஞ்சிகேரா என்னுமிடங்களை அடைந்து பன்னூறு ஆண்களாக நாகரிகம் முதிராத விலங்கு நிலையில் வாழ்ந்து

11. தொல்காப்பியம் பொருள், சூ.25.
12. ரிக் வேதகால ஆரியர்கள் ப.100

வருணாச்சிரமத்தை வகுத்துக் கொண்ட பார்ப்பனர்கள் பூமியில் நடமாடும் தேவர்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

வேள்வியையும், உயிர்ப் பலியையும் தெய்வத் தன்மை வாய்ந்தவை என்று பிரச்சாரம் செய்தார்கள். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு உற்பத்தி செய்த உழவர்களையும் பிற தொழில் செய்த கொல்லர், தச்சர் போன்றவர்களை இழிசினர், தீண்டத் தகாதவர்கள் என்று குருமார்களால் மிகக் கொடூரமாகச் சுரண்டப்பட்டனர். விலங்குகளைவிடத் தாழ்வாக நடத்தப்பட்டனர். வேத, வேள்விகளை ஏற்றுக் கொள்ளாத திராவிட இனக் குழு மக்களை தஸ்யூக்கள், தாசர்கள், சூத்திரர்கள் என்றும் அவர்கள் வேதத்தைப் படிக்கக் கூடாது என்று விதிசெய்து கொண்டனர்.[13]

பார்ப்பனியச் சுரண்டலை எதிர்த்து அணுவியலின் அடிப்படையில் கிளம்பியது உலகாயுதம் அதன் அடிப்படையில் ஆசிவகம், சாங்கியம், சமணம், வைணவம், பவுத்தம் போன்ற பல மதக்கருத்துக்கள் உருவாயின. பார்ப்பனியம் வரலாறு காணாத அளவுக்குச் செல்வாக்கிழந்தாலும் செத்துவிடவில்லை. ஆசிவகமும், சமணமும், 'ஆன்மா அழிவில்லாதது, முற்பிறவியில் செய்த நல்வினை தீவனைக்கேற்ப மறுபிறவி எடுக்கிறது என்னும் நம்பிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு பார்ப்பனியத்தோடு இணைந்து நின்று சார்வாகச் சிந்தனைகளை அழித்து விட்டன. இந்த நிலையில் கடைசிவரை பார்ப்பன மதத்துக்குச் சவாலாக இருந்தது புத்தமதம் மட்டுமே. புத்தர் மக்கள் மொழியில் பேசியதால் பெரும்பாலான தாழ்த்தப்பட்டவர்கள், சூத்திரர்கள், வணிகர்கள், ஷத்தியர்களான அரசர்கள் புத்தமதத்தைப் பின்பற்றலாயினர். பார்ப்பனர்களின் வாழ்வுக்கு மூலாதாரமான வேள்வி, உயிர்ப்பலி நசிந்துவிட்டது. அந்த நிலையில் சில பார்ப்பனர்கள் கூலி வேலை செய்ததாகவும் சொல்கிறார்கள்[14].

இந்த நிலையில் புஷ்யமித்திர சுங்கன் என்னும் பார்ப்பான், அசோகன் வழி வந்த பிரகத்ரன் என்பவனைப் படுகொலை செய்துவிட்டு அரியணை ஏறுகிறான். பிற்காலத் தமிழகத்தில் ஞான சம்பந்தன் என்னும் பார்ப்பான் 8000 சமணர்களைக் கழுவேற்றியது போல புஷ்யமித்திரன் பவுத்தர்களைத் தேடிக் கண்டுபிடித்து அழித்தான்[15]. பார்ப்பனியச் சிந்தனைகள் மதமாக உருவெடுத்து அனைத்திந்திய மதமாக வளர்ந்து விட்டது.

**தமிழ்ச் சமூக நிலை:** மன்னர்கள் பார்ப்பனர்கள், நிலக்கிழார்கள், வணிகர்கள் ஆகிய நபர்களிடம் செல்வம் குவிந்து கிடந்தது. உழவர்கள், பிற தொழில் புரிந்தவர்கள் என 90% மக்கள் தாழ்ந்த சாதிக்காரர்களாக, தீண்டத் தகாதவர்களாக, அடிமைகளாக நடத்தப்பட்டனர்[9]. பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடினார்கள். அதனால் திருட்டு, கொள்ளை, வழிப்பறி, கொலை, விபச்சாரம் போன்ற சமூகச் சீர்கேடுகள் தலைவிரித்தாடின. இந்த சீர்கேடுகளைக் கண்டு மனம் நொந்த வள்ளுவர், வறுமையின் கொடுமையைக் குறைக்கும் வகையில் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கிறார். அது பகிர்ந்துண்டு பல்லுயிரோம்புதல் என்னும் புராதனப் பொதுவுடைமைச் சமுதாயத்தின் சொச்ச மிச்ச பழக்கம் எனலாம். வள்ளுவர் கூறுவன தருமகருத்தா முறை அன்று தனி நபரிடம் செல்வம் குவிவதைத் தடுக்கும் முறை எனலாம்.

---

13. Gertrude Emersen, The Story Of Early Indian Civilization, P.18, Orient Longman, New Delhi

14. பிரேம் நாத்பசாள் இந்திய வரலாற்றில் பகவத் கீதை, தமிழில் கே. சுப்பிரமணியன், விடியல் பதிப்பகம், சூலூர் வெளியீட்டகம், பக்கம் 186

15. பிரேம் நாத்பசாஸ், அதே நூல், பக்கம். 207

**பொருளதாரச் சிந்தனைகள்:** மாந்தருக்குள் எவ்வளவு பெரியவராயினும் உணவின்றி வாழ முடியாது. அக்காலத்தில் பொருள்களுக்கெல்லாம் பொருளாய் இருந்தது உழவுத் தொழில். ஆரிர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன்னரே திராவிடர்கள் உழவுத்தொழிலை அறிந்தவர்கள். ஆனாலும் ஆரியர்கள் அட்ராஞ்சிகேராவில் குடியேறிய 200 ஆண்டுகளுக்குப்பின்னரே உழவின் பெருமையை உணரலாயினர்.

என்றாலும் உழவர்களின் தொழிலே உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்னும் உண்மையை உழவர்கள் உணர்ந்துவிட்டால் பார்ப்பான், அரசன், போன்றவர்களும் உழவனை வணங்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்ற உண்மையை உணர்ந்த வைதீகப் பார்ப்பனர்கள் உழவர்களைத் தாசர்கள், தஸ்யுக்கள், இழிசினர், தீண்டத்தகாதவர்கள் என்று உபநிடதங்களையும் மநுநீதிகளையும் எழுதி வைத்துக்கொண்டனர். இந்த நிலையில் இந்திய வரலாற்றில் புத்தருக்குப் பிறகு பார்பனியத்துக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியவர் திருவள்ளுவர் ஒருவரே எனலாம்.

வள்ளுவர் பார்ப்பனர்களின் கொள்கைகளை எதிர்ப்பதோடு நின்றுவிடாமல் அவர்களால் இழித்துப் பேசப்பட்ட உழுதொழிலுக்கு ஈடான தொழில் உலகத்தில் வேறு எதுவும் இல்லை என்று பிரகடனப் படுத்துகிறார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள்-1033)

என்று உழவர்கள் தான் மானத்தோடு வாழ்பவர்கள், மற்ற மன்னனோ, மறையோதும் பார்ப்பானோ யாராக இருந்தாலும் அவனை வணங்கி வாழ்பவர்களே என்கிறார் வள்ளுவர். உழுதொழில் வருந்திச் செய்ய வேண்டிய தொழிலாயினும் அதுவே தொழில்களில் எல்லாம் தலை சிறந்தது (1031). சொத்து சேர்த்துக் கொள்ளக்கூடாது என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சமண, பவுத்த துறவிகளும், வாழ்ந்த காலம் வள்ளுவர் காலம். அவர் சொல்கிறார் மற்றவர்கள் விரும்பும் பொருள்களை வேண்டாம் என்று வெறுத்துவிட்ட மேற்கூறப்பட்ட துறவிகளுக்குக் கூட, உழவர் செயற்படவில்லை யென்றால், வாழ்க்கை இல்லை என்கிறார். (1036)

**தனி நபரிடம் செல்வம்:** பொருள் சேர்ப்பதில் கூட, வள்ளுவர், இல்லறத்தாருக்கு ஒரு விதியையும் அரசுக்கு வேறு விதியையும் கூறுவதாகத் தெரிகிறது. வெ.ஃகாமை என்னும் அதிகாரத்தில் பிறர் பொருளின் மீது ஆசைப் படக்கூடாது என்கிறார். விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை என்னும் அதிகாரங்களில் இல்லறத்தானிடம் உள்ள செல்வம் ஊருக்கு நடுவில் இருக்கும் உண்ணும் நீர் நிலையைப் போல் இருக்க வேண்டும் (215). உண்டால் பயன் தரும் மரம் ஊருக்குள் பழுத்திருப்பதைப் போல் தனி நபரின் செல்வம் பலருக்கும் பயன் பட வேண்டும் என்கிறார் (216). சுருக்கமாகச் சொன்னால் இல்லறத்தான் முயன்று ஈட்டிய செல்வமெல்லாம் இல்லாதவருக்குப் பயன் படுத்துவதற்கே இருக்க வேண்டும் என்கிறார் (212). ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் தனி நபரிடம் குவியும் செல்வம் சமுதாயத்தின் அனைத்துச் சீர்கேடுகளுக்கும் வழிவகுத்துவிடும் என்னும் மார்க்சிய சிந்தனையைப் போலிருப்பது சிந்திக்கத்தக்கது.

**அரசன் பொருள் செயல்வகை:** வட நாட்டு ஆரியர்களுக்கிடையில் அரசு தோன்றியது மிக மிகப் பிற்காலத்தில்தான் என்று தெரிகிறது[1]. ஆனால் தமிழகத்தில் கி.மு. 3000 அளவிலேயே அரசுகள் உருவாகி விட்டதால் இங்கு அரசு என்பதே அரசன் தான். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் அவனுக்கு அங்கங்கள். ஆரியர்களுக்கிடையில் மேற்கூறிய ஆறோடு அரசனும் அரசின் அங்கம். திராவிடர்களின் அரசைவிட ஆரியர்களின் அரசு பிற்காலத்தில் வளர்ந்தது.

எவ்வாராயினும் அரசன் பொருளை மிகுதியாகச் சேர்க்க வேண்டும் என்று அங்கவியலில் கூறுகிறார். அரசன் பொருள் சேர்க்க வேண்டும் அது பகைவர்களின் செறுக்கை அறுக்கும் படை (759). மேலும் பெரும் பொருளும் சுங்க வரியும் பகைவரை வென்று கொண்ட பொருளும் அரசனுடைய பொருளாகும் என்கிறார்.

"உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள்-756)

உறுபொருள் என்பதற்கு மிகு பொருள் என்ற பொருளும் உண்டு. (காண்க புறம் 183)

குருமார்களான பார்ப்பன வர்க்கத்தார் தங்களின் மேலாண்மையைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. கடவுள்களும் பார்ப்பனர்களின் ஆதரவிலேயே வாழ்ந்தனர். பார்ப்பனர்கள் கடவுளுக்குச் சிறிதும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்னும் மனப்பாங்கில் நடந்து கொள்ளுமாறு மனு கூறுகிறது. பார்ப்பான் பிரமத்தின் முகத்திலிருந்து தோன்றியவன், முதலில் தோன்றியவன் என்ற

---

16. A.L. Basham, Opcit, P,40

முன்னுரிமை பெற்றிருப்பதால், வேதத்தைத் தன் உடைமையாகப் பெற்றிருப்பதால் படைப்புள் யாவற்றுக்கும் "பிரபு" வாக இருக்கும் பிறப்புரிமை பெற்றிருக்கிறான்[17]" ஆரியப் பார்ப்பனர்கள் உடலுழைப்பை இழிதொழிலாகக் கருதினார்கள். சிந்துவெளி முதல் அட்ராஞ்சி கேரா வரை வாழ்ந்த திராவிட இன மக்களை அடிமைப்படுத்திக் கொண்டு சுரண்டி வாழ்ந்தனர். வேளாண்மை செய்தவர்கள் இழிசினராக நடத்தப்பட்டனர். தமிழ் நாட்டிலும் அதே நிலை புகுந்தது.

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
பிற தொழில் இல்லென்ப"

என்னும் விதியை தொல்காப்பியத்தில் செருகி விட்டனர். (625) உயிர் வாழ்க்கைக்குத் தேவை உணவு, அந்த உணவை உற்பத்தி செய்யும் தொழில் தாழ்ந்தது என்று சொல்வதை வள்ளுவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே உலக மக்களின் உயிர் வாழ்க்கைக்கு உதவும் உழவன் குடி உயர வேண்டும் அவன் தொழில் தொடர வேண்டும் என்று உணர்கிறார். தாம் உணர்ந்த உண்மையை உலகறியச் செய்யும் முயற்சியில் உழுதொழிலின் சிறப்புகளையும் அதற்குத் தேவையான முயற்சியையும் ஊக்கத்தையும் குடி செயல் வகையில் கூறுவதைக் காண்போம்.

குடி செயல் வகையில் ஒருவன் தான் பிறந்த குடியை உயர்த்த மேற்கொண்ட செயலில் (கருமம்) சோர்வு அடைய மாட்டேன் (கை தூவேன்) என்னும் பெருமையைக் காட்டிலும் சிறந்த பெருமை (பீடு) மிக்கது வேறு ஒன்றுமில்லை (1021) என்கிறார். என் குடியை உயர்த்த செயல்படுவேன் என்னும் ஒருவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு அவனுக்கு முன்னே சென்று உதவி செய்யும் என்கிறார் (1023) அந்தக் காலத்தில் சிறந்த தொழில் உழவும் வாணிகமும் ஆகும். வாணிகம் செய்வோர் பொன்னும் பொருளும் வைரமும் ஈட்டலாம். ஆனால் அவற்றை உண்ண முடியுமா? அவருக்கும் வயிற்றுக்குச் சோறு வேண்டுமே, எனவே தான் வள்ளுவர் சொல்கிறார் வேதம் ஓதுதல், வேள்வி செய்தல், போர் செய்தல், வாணிகம் செய்தல் போன்ற பல்வேறு தொழில்களைச் செய்து சுற்றித் திரிந்தாலும் ஏர்த் தொழிலுக்குப் பின்னே தான் செல்கிறது உலகம் (1031) உழவர்கள் உழுதொழில் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட்டால் எல்லவாற்றையும் துறந்துவிட்டோம் என்று சொல்கின்ற துறவிகளுக்கும் வாழ்க்கை இல்லை (1036). அரசர்கள் அதிகாரம் மிக்கவர்கள் வெண் கொற்றக் குடை பிடித்து ஆட்சி செய்கிறவர்கள். அவர்களின் குடைகளெல்லாம் உழவர்கள் பிடித்திருக்கும் நெற்கதிரான குடை நிழலின் கீழே தான் என்பதை உழவர்கள் காண்பர்கள் (1034) என்கிறார்.

இந்த இடத்தில் வரிகட்ட முடியாமல் குளமுற்றத்துக் துஞ்சிய கிள்ளி வளவனால் சிறையில் அடைக்கப்பட்ட வெள்ளைக்குடி நாகனார் என்பவர் அரசனைப் பார்த்து

---

17. K. Damodaran, Opcit, P.p 24-25

"வெளிற்றுப் பனந் துணியின் வீறற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகல் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே" (புறம் 35 – 20 – 26)

என்கிறார். அரசே! உன்படை போர்க்களத்தில் பெறும் வெற்றியெல்லாம் ஏராகிய கருவி (படை) உழுத பசைட் சாலில் விளைந்த நெல்லினது பயனே' என்பது பொருள்.

வள்ளுவர் சொல்கிறார், நான் எதுவும் இல்லாத ஏழை என்று சொல்பவன் சோம்பேறி. அப்படிப் பட்டவனைக் கண்டால் நிலம் என்னும் பெண் எள்ளி நகையாடுவாள். (1040) அவர் மேலும் சொல்கிறார் தன்கையால் உழுது விளைந்த நெல்லை உண்டு வாழ்பவன் தான் உரிமையோடு வாழ்பவன். ஏனையோர் அனைவரும் அவனைத் தொழுது அவன் கொடுத்ததை உண்டு வாழ்பவர்கள் தான்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்" என்பது குறள் (1033)

உழைப்பில் அறிவு உழைப்பு உடலுழைப்பு என இருவகை இருப்பது வள்ளுவருக்குத் தெரிந்திருக்கிறது. மன்னன் துணையாகப் பெற வேண்டிய பெரியோர், அருள் சேர்ந்த நெஞ்சினார், அருள் ஆள்வார், சான்றோர் போன்றவர்களைக் குறிப்பிடுகிறார். உழவு உடலுழைப்பைப் பற்றியது. வள்ளுவர் அறிவு உழைப்பாளர் பெயர்களில் பார்ப்பனியம், சமணம், பவுத்தம் போன்ற மதவாதிகளைக் குறிப்பிடாமை மனங்கொளத் தக்கது. மேலும் மதத்தின் பெயரால் ஊரை ஏமாற்றி, உழைக்காமல் உயர்ந்த உணவு, ஊருக்கொரு கள்ளக் காதலி, உல்லாச பங்களா என்று உல்லாச வாழ்க்கை நடத்திய தீய சக்திகைள மானமில்லாதவர்கள். துறவி, மதத் தலைவன், மடாதிபதியராக இருந்தாலும் அவரவர்களுக்குரிய செயலை வழுவின்றி செய்தல் மரியாதைக்குரியது; மானமுள்ள செயல். தன் நிலைக்கு ஏலாத இழி செயல்புரிகிறவன் தலையின் இழிந்த மயிர் அனையன் (964) என்கிறார்.

**இல்வாழ்க்கை:** திருக்குறளில் பாயிரம் என்னும் தலைப்பில் அமைந்த "வான் சிறப்பு" தவிர ஏனைய 3 அதிகாரங்கள் திருவள்ளுவரால் எழுதப்பட்டிருக்மா என்ற ஐயம் எழுகிறது. காரணம் அங்குச் சொல்லப்படும் செய்திகள் நூலினுள் வெவ்வேறு இடங்களில் சொல்லப்படுகின்றன. அது ஒரு தனி ஆய்வுக்கு உரியது. அதைப் பற்றி பேராசிரியர் தி. முருகரத்தினம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் உண்மையான திருக்குறள் இல்லறவியல் - இல்வாழ்க்கையில் தொடங்குவதாகத் தெரிகிறது. இந்த அடிப்படையில் தனி நபர் குடும்பம், தனிச் சொத்து, அரசு போன்றவற்றைப் பற்றிய வள்ளுவர் சிந்தனைகள் சிலவற்றைக் காண்போம், இல்லறம், துறவறம், அரசியல், அமைச்சியல் போல தனிநபரைப் பற்றி வள்ளுவர் எந்தத் தலைப்பில் சொல்கிறார் என்ற கேள்வி எழுதல் இயல்பு. இயல் எதுவாக இருந்தாலும் பெரும்பான்மையான குறட்பாக்கள் தனி நபருக்கும் பொருந்துமாறு அமைந்திருக்கின்றன. அதுவே திருக்குறளின் தனிச் சிறப்பும் பெருமையும் ஆகும். இந்த உண்மை ஆங்காங்கே சுட்டிக் காட்டப்படும்.

---

"Aryan man, like all savage people, took a long time to observe the effects of conditions of promiscuity or inbreeding. The small social group of men and women, holding together against wild nature, worked and lived collectively and breed within itself. As in economy, so in sex, he remarried a savage, half man, half animal, growing out of nature and against her, trying to understand her and overcome her. The underriralbity of relations between the male and the female when thwy happen to be son and mother, father and daughter or mother and sistor had not yet been seen by him".

**குடும்பம்:** ஆரியர்கள் மனிதத் தன்மையற்ற விலங்கு நிலையில் இருந்தவர்களைப் (Savage) போலவே வரைமுறையற்ற பாலுறவின் மூலம் இனத்தைப் பெருக்கிக் கொள்வதன் தீய விளைவுகளைப் புரிந்து கொள்வதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டார்கள். ஆணும் பெண்ணும் அடங்கிய சிறிய இனக் குழுக்களாக வாழந்து தங்களுக்குள்ளேயே இனத்தைப் பெருக்கிக் கொண்டனர். இயற்கையிலிருந்து அரைமனிதன் அரை விலங்கு நிலையில் பொருள் தேடுவதில் எவ்வாறு கூட்டமாக இயங்கினார்களோ அதைப்போலவே, பாலுறவிலும் கூட்டாக இயங்கி இயற்கையைப் புரிந்து கொள்வதற்கும் அதை வெற்றி பெறுவதற்கும் முயன்றார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் அதாவது மகனும் தாயும் தந்தையும் மகளும் அல்லது தாய் அல்லது உடன் பிறந்த பெண்ணுடன் கொண்ட பாலுறவு வெறுக்கத்தக்கது என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. என்கிறார் அறிஞர் S.A. டாங்கே[2].

குடும்பம் என்பது மனத்தின் மூலமோ மணம் இன்றியே ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்ந்து பெற்ற பிள்ளைகளும் பெரியவர்களும் அடங்கிய ஒரு அமைப்பு. நாகரிகம் வளர்ந்த காலத்தில் திருமணத்தின் மூலம் அமைந்த குடும்பம் சமூகத்தின் மையக் கருவாகக் கருதப்பட்டது. ஒரு தாரமணம் (Monogamy) என்பது வளர்ந்த நாகரிகத்தின் விளைவு என்றாலும் பெண் ஒரேடியாக ஆணுக்கு அடிமையாக்கப்பட்டு விட்டாள். வள்ளுவர் காலத்தில் வாழ்ந்த சமண, பவுத்தர்கள் இல்லறத்தைவிட துறவறத்தை பெரிதும் ஆதரித்தனர் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவோர் துன்ப துயரங்களுக்கு ஆளவார்கள் என்று சமணத் துறவி கவுந்தியடிகள் கூறுகிறார்.[19] அதே காலத்தில் ஆரியர்களுக்கிடையில் குடும்ப வாழ்க்கை இடம்பெறவில்லை என்று முன்னரே கூறப்பட்டது. டாங்கே மேலும் கூறுகிறார்.

அன்றாட வாழ்வில் வாழ்வில் நன்றாகத் தின்றுவிட்டு நீண்ட தீக்குழியைச் சுற்றி எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி, அந்தந்த நேரத்தில் எதிர்ப்பட்ட ஆணும், பெண்ணும் உடலுறவு கொண்டனர். தாய், உடன் பிறந்த அக்காள், தங்கை என்ற வேறுபாடின்றி வயது வந்த பெண்களெல்லாம் வயது வந்த ஆண்களுக்கு மனைவிமார்கள். அவர்களுக்குத் தாய் யாரென்று தெரியும் தந்தையைத் தெரியாது.[20] இதே கருத்தை வரலாற்றிசிரியர் டி.என்.ஜா அவர்களும் கூறுவது அறியத்தக்கது.[21] அட்ராஞ்சிகேராவில் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இணைமணம், குழுமணம், ஒருதாரமணம் (Monogamy) என்றும் நாகரிக வாழ்க்கையைக் கற்றுக் கொண்டனர். ஆனால் தமிழர்கள் கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முன்னரே மிக உயர்ந்த நாகரிகம் அடைந்துவிட்ட காரணத்தால் சடங்குகளோடு உரோகிணி நன்னாளில் திருமணம் நடைபெற்றதாக அகநானூற்றுப் பாடல்கள் 86-136 மிகத் தெளிவாகக் கூறுகின்றன. “கற்பெனப்படுவது காரணமொடுபுணரல் என்று தொல்காப்பியர் விதி கூறுகிறார். (தொல். பொருள் 140)

திருவள்ளுவர் ‘இல்வாழ்க்கையில்’ இல்லறத்தான் ஆற்ற வேண்டிய கடமைகளை பற்றியும் ‘வாழ்க்கைத் துணை நலத்தில்’ மனைவிக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றியும் கூறுகிறார். இல்லறத்தில் ஈடுபடுகிறவன் நல்லொழுக்கம் உடையவனாக பிறர் மனைவியை நெஞ்சத்தாலும் நினைத்துப் பார்க்காதவனாக இருக்க வேண்டும் என்கிறார். மேலும் அக்காலத்தில் சமண, பவுத்தத் துறவிகளும் பிச்சையெடுத்து வாழும் (உஞ்சவிருத்தி) பார்ப்பனர்களும் நிறைந்திருந்தனர். அவர்களுக்கு இல்லறத்தான் உதவ வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. அறநெறியில் இல்வாழ்க்கை நடத்துகிறவன் பெறும்பயனைத் துறவு, தவம் போன்ற வேறு எந்த முறை வாழ்க்கையிலும் பெற முடியாது (46) என்கிறார்.

---

18. S.A. Dange, India From Primitive Communism To Slavery, P.71
19. சிலப்பதிகாரம், ஊர்காண் காதை 35-43
20. S.A. Dange, India From Primitive communism To Salvery, P 49
21. D.N. Jha Ancient India Opcite P 14-1977

“அறமெனபட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன் பழிப்ப தில்லாயின் நன்று” (குறள்-49) என்கிறார்.

அடக்கமுடைமை, கள்ளாமை, கூடாஒழுக்கம் போன்ற பல தலைப்புகளில் அவர் கூறும் செய்திகள் தனி நபரின் நல்லொழுக்கம் பற்றியவை; இக்காலத்துக்கும் ஏற்புடையவை.

**உடைமை:** உடைமை அல்லது சொத்து (Property) வாழ்க்கை இன்றியமையாத ஒன்று என்பது உலகறிந்த உண்மை. அந்தச் சொத்து சேர்ப்பது பற்றி வள்ளுவர் அரசனுக்கு ஒரு முறையும் தனி நபருக்கு ஒரு முறையும் கூறுவதாகத் தெரிகிறது.

இனி உடைமை – பொருளின் இன்றியமையாமை பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைக் காண்போம். பொருளில்லாதவரை உலகம் ஒரு பொருட்டாகக் கருதாது. (751) இல்லாரை எல்லோரும் பழிப்பார்கள் (752) பகைவரின் ஆணவத்தை அடக்க வேண்டுமென்றால் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்கிறார். (759) எனவே பெருஞ்செல்வம், சுங்கப் பொருள், பகைவருடன் போரிட்டுக் கொள்ளையிட்ட பொருள் ஆகியவை அரசனுக்கு உரியவை என்கிறார்.

“உறுபொருளும் உல்கு பொருளும் ஒன்னார்த்

தெறு பொருளும் வேந்தன் பொருள்” (குறள்-756)

‘உறுபொருள்’ என்பதற்கு மக்கள் தரும் வரிப்பொருள்கள், புதையலாகக் கிடைத்த பொருள் என்று பலவாறு பொருள் சொல்கிறார்கள். ஆனால்

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனயிாது கற்றல் நன்றே”

என்னும் புறநானூறு (183) பாடலில் வரும் உறுபொருள் என்பதற்கு ‘மிக்க’ பொருள் என்றே பலரும் பொருள் கூறுகின்றனர். எனவே வள்ளுவரும் மிகுந்த பொருள் அரசனுக்கே உரியது என்று கூறுவதாகக் கொள்வது பிழையாகாது. அப்படி என்றால் தனி நபரிடம் மிகுந்த செல்வம் குவியக் கூடாது என்று சொல்கிறாரா? ஆம்.

இல்லறவியலில், துறவிகள் துறவு மேற்கொள்ளாமல் வறுமையில் வாடுவோர், இறந்தவர்கள் ஆகிய மூவர்க்கும் இல்வாழ்வான துணையாக இருக்க வேண்டும் என்கிறார். இறந்தவர்களுக்குச் செய்யும் உதவி நீத்தார் கடன் (42,43) என்று கூறுகிறார். இல்லறத்தில் இருந்து கொண்டு செல்வத்தைச் சேர்த்துப் பாதுகாப்பது எல்லாம் விருந்தோம்பலாகிய உபகாரம் செய்வதற்கே (81) என்கிறார். விருந்தினருக்கு உதவி செய்பவர்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் விளக்குகிறார்.

மேலும் ‘ஒப்புரவறிதல்’ என்னும் அதிகாரத்தில் பயன் கருதாமல் பெய்யும் மழையைப் போலப் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் (212) ஒருவனுக்குச் செய்யும் உதவியைப் போன்ற நல்ல ஒன்றை தேவலோகத்திலும் இந்த உலகத்திலும் பெறுவது அரிது என்கிறார் (213) உண்ணும் நீர் நிலை ஊரின் நடுவிலிருந்தால் எப்படிப் பயன்படுமோ அதைப் போல பேரறிவாளனுடைய செல்வம் இருக்க வேண்டும் (215) உண்டால் பயன்தரும் பழத்தை உடைய மரம் உள்ளூரில் பழுத்திருப்பது போன்றது நல்லவனுடைய செல்வம் (216) பெருந்தன்மை உடையவனின் செல்வம் நோயாளிக்கு எளிதாகக் கிடைக்கக் கூடிய மருந்துபோல் இருக்க வேண்டும் என்கிறார். இது காறும் உணவு, உடை போன்ற பொருள்களைக் (217) கொடுத்து உதவுதல் பற்றிக்கூறிய வள்ளுவர் ஈகை என்னும் அதிகாரத்தில் ஒன்றுமில்லாத வறியவர்களுக்குக் கொடுப்பது தான் ஈகை. அவ்வாறன்றி வசதி படைத்தவர்களுக்குக் கொடுப்பது ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும் என்கிறார் (221) தெய்வங்களுக்குப் படைப்பது, யாகங்களின் மூலமும் வேறு வழிகளிலும் மடாதிபதிகளுக்குச் சிறப்பு செய்வது குறைந்த செலவில் நிறைந்த பயன் பெற நினைப்பதாகும். செல்வம் பெற்றவன் வறுமையுற்றவனுடைய பசியைப் போக்க வேண்டும்; செல்வத்தைச் சேகரித்து வைப்பதற்கு உரிட இடம் அதுவே (226) வறியவனாக வந்த ஒருவன் பசி தீர ஈயாதவன் செல்வத்தைத் தேடி வைத்து இழக்கும் செல்வம் குவிவதை வள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மறைமுகமாகக் கண்டிப்பதாகவே கொள்ள முடிகிறது.

**கல்வி:** இந்திய நாட்டின் வளமையால் ஈர்க்கப்பட்டு நுழைந்தவர்கள், படையெடுத்து வந்தவர்கள் பல்வேறு இனங்களைச் சேர்ந்த வெளிநாட்டவர்களாவர். அவர்களுள் முதலில் வந்த ஆசிரியர்களைத் தவிர வேறு எந்த இனத்தவரும் உள்நாட்டு மக்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வை உண்டாக்கியதில்லை. ஆரியர்கள் இங்கு வருணாசிரமத்தை வகுத்துக் கொண்டு, உள்நாட்டு மக்களை (Aborgines) சூத்திரர்கள், அடிமைகள், சண்டாளர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்து, இழிவுபடுத்தி, வேதத்தை படிக்கக்கூடாது என்று சட்டமியற்றிக் கொண்டனர். படித்தால் அவர்களின் நாக்கை அறுக்க வேண்டும். பார்ப்பான் படிப்பதைக் காதால் கேட்டால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்ற சட்டமியற்றிக் கொண்டனர். கல்வியை, மதமிலாதவர்களுக்கோ, யாரால் இலாபமில்லையோ யாரிடம் தக்க பணியுடைமையில்லையோ, அவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது, மீறிக் கற்பிப்பது

களர் நிலத்தில் விதைப்பதைப் போன்றது. … ஆனால் எவன் வேதத்தை மனப்பாடம் செய்து ஒப்பிக்கிறானோ அவனுடைய அனுமதியின்றி யாராவது வேதத்தைப் படிப்பவன் திருடன், அவன் நரகத்துக்குப் போய்விடுவான்.[22] என்பது மனுநீதி.

**வருணப் பாகுபாடு மறுப்பு**

பார்ப்பனியம் என்பது மக்களுக்கிடையில் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிப்பது[23]. வள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் பார்ப்பனியம் பரவி அரச மரியாதை பெற்று விட்டது. பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதி பல யாகங்கள் செய்தான்; பார்ப்பனர்களுக்குப் பல ஊர்களைப் பிரமதேயமாக அளித்தான்[24]. தலையாலங்கானத்துச் செரு வெண்ற நெடுஞ்செழியன் பல வேள்விகளைச் செய்தான். கரிகால் பெருவளத்தான் வேத முறைப்படிப் பெரிய வேள்வி செய்தான். (புறம் 224) அரசர்கள் வேள்வி செய்த அவர்களுக்குப் பணிந்து வாழ்ந்தது பற்றி 397, 166, 400 போன்ற புறப்பாடல்கள் விளக்குகின்றன. சேர மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு அளவிறந்த செல்வத்தை அள்ளிக் கொடுத்தனர். பார்ப்பனர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள். அந்தணர்கள் என்று சொல்லிக் கொண்டு உழைக்காமல் சொத்து சேர்த்துக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடதினார்கள். தமிழகத்தில் சாதிகளையும் தீண்டாமையையும் புகுத்தினார்கள். இந்தக் கொடுமைகளைத் தட்டிக் கேட்க யாரும் முன்வரவில்லை. இந்த நிலையில் புத்தருக்குப் பிறகு இந்திய நாட்டில் பார்ப்பனியத்தை எதிர்த்துக் குரலெழுப்பியவர் வள்ளுவர் ஒருவரே.

மக்களுக்கிடையில் பிறப்பால் உயர்ந்தவன். செய்யும் தொழிலால் உயர்ந்தவன் என்பதை மறுக்கிறார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள்-972)

---

Learing Should not be shown where there is neither religion nor profit, nor atleast suitable obedience, Just as good as seed (Should not be sown) on salt soil… But any one who acquires the veda without permission from some one who is reciting it is a thief of the vadas and go to hell.

19. The Law of the manu – Translated by Vindy Dorgien with Brain K. Smith Chapter 2,214 & 216
23. காண்க அடிக்குறிப்பு பக்கம் 6
24. K.A. Nelakanta Sastri, A History of South India P.130 Oxford India Paper backs P.
25. சிலம்பு, 13 – 38 – 39.

வேதம் ஓதும் தொழில் செருப்புத் தைக்கும் தொழிலைவிட உயர்ந்ததில்லை என்பது வள்ளுவர் கருத்து. பிறப்பை அடிப்படையாகக் கொண்டு மேலோர், கீழோர் என்பதை மறுக்கிறார்.

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர் (973)

மேல்சாதியோ கீழ்ச்சாதியோ மேலான பண்புடையவர்களே மேலானவர். அஃதில்லார் யாராக இருந்தாலும் கீழோர்களே என்கிறார். இந்தக் காலத்தில் இருப்பதைப் போலவே அந்தக் காலத்திலும் ஒழுக்கங்கெட்ட பார்ப்பனர்கள் பல்கியிருந்தனர். ஒழுக்கங்கெட்ட பார்ப்பனர்களை மக்கள் ஊருக்குப் புறத்தே ஒதுக்கி வைத்திருந்தனர் என்பதை சிலப்பதிகாரம், புறஞ்சேரி இருத்த காதை விளக்குகிறது[25]. பார்ப்பான் வேதம் படிக்க மறந்துவிட்டால் படித்துக் கொள்ளலாம்; ஒழுக்கங்கெட்டால் எந்த மரியாதையும் இல்லை (134) என்கிறார்.

இந்தக் காலத்தில் துறவு பூண்டுவிட்டதாகச் சொல்லிப் போலிகள் பலர் மடங்களை அமைத்துக் கொண்டு மது, மங்கை என்று சுகபோகங்களை அனுபவிக்கும் சமூக விரோதிகள் பலர். இப்படிப்பட்ட பார்ப்பனக் கயவர்கள் பழங்காலத்திலும் இருந்ததைப் படம்பிடித்துக் காட்டுகிறது கலித்தொகை.

ஒரு இளம்பெண் தன் காதலனைச் சந்திக்க “இரவு குறி” யிடத்தில் நிற்கிறாள். அதை அறிந்து கொண்ட தொழுநோயால் முகம் கருத்துக் கை கால் குறைந்த ஒரு கிழப் பார்ப்பான் அவளைக் கெடுக்க முயல்கிறான். அவள் மண்ணை வாரி முகத்தில் வீசுகிறாள். அவன் ஊளையிடுகிறான். ஊராருக்கு அவனுடைய இழிசெயல் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைகளை (குறிஞ்சிக்கலி 29) நன்கு அறிந்த வள்ளுவர், மக்கள் தம் உயர்வுக்குரிய நிலையிலிருந்து வழுக்கி விழுந்த போது தலையிலிருந்து விழுந்த தாழ்வுள்ள மயிரைப் போன்றவர் ஆவர்; மேலும் பார்ப்பனர்கள் தங்களை அந்தணர் என்று கூறிக்கொள்வதை ஒத்துக் கொள்வதில்லை.

இடம் இன்மையால் சில அரிய செய்திகள் விடப்பட்டுள்ளன.